# ராம மகிமை
# உள்ளே தோன்ற

ஸ்ரீராம சந்திர கிருபாகரா
என சந்ததம் மனம் கூவிடும்
என் யோகிராம சுரத்குமாரா
உந்தன் நாமமே காரணம்  ஸ்ரீராம் ஸ்ரீராம்

அருணாச்சல மலையோரமாய்
வளர் பிரேமையால் சுகபாவமாய்
கருணாநிதே என்னை மாற்றினாய்
கவிவால்மீகி கதை காட்டினாய்
(ஸ்ரீராம சந்திர)

உயர் வேதம் ஆயிரம் தேறினும்
அந்த ராவணன் மனம் காமமாய்.
துயராழி சூழ்ந்தது காட்டினாய்
என் மோகமனதை மாற்றினாய்
(ஸ்ரீராம சந்திர)

ராமன் என்பது தோழமை
ஸ்ரீராமன் என்பது காதலாம்
ரகுராமன் என்பது வீரமாம்
இந்த மூன்றுமே இங்கு வேதமாம்
(ஸ்ரீராம சந்திர)

தாசமாருதி சாகசம்
தாய் சீதை காட்டிய சோகமும்
நம் சிநேக ராமனின் சீற்றமும்
நீ சொல்லக் கேட்பது பாக்கியம்
(ஸ்ரீராம சந்திர)

துளசி தாஸரும் கம்பரும்
அருணாச்சல கவி போலவும்
உயர் புலவர் ஆயிரம் தோன்றுவார்
தினம் ராமர் கதையை கூறுவார்
(ஸ்ரீராம சந்திர)